அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 09/2015

எனது இல : EST -9/POLIC/03/0235
அரசாங்க நிர்வாக உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு – 07

2015.04.17

அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண பிரதம செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,
கூட்டுத்தாபனங்கள், சபைகள், நியதிச்சட்ட நிறுவகங்கள் ஆகியவற்றின் தலைவர்களுக்கும்.

## அரசியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கல்

2015.04.08 ஆந் திகதி இடம் பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது, 1994 இலிருந்து 2014.வரையிலான கால எல்லையினுள் நியமனங்கள், இடமாற்றங்கள், பதவியுயர்வுகள் ஆகியவற்றில் அரசியல் ரீதியாக பழிவாங்கப்பட்டவர்களின் மேன்முறையீடுகளை பரீட்சித்துப் பார்த்து நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

02. அக் கால எல்லையினுள் அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்பட்டோர் 2015.05.05ஆந் திகதிக்கு முன்னர் தத்தமது மேன்முறையீடுகளை கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

மேலதிகச் செயலாளர் (அரசாங்க நிர்வாகம்)
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, சனநாயக ஆட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு - 07

03. மேற்படி கால எல்லையினுள் எந்தவொரு கட்சி தலைமையகத்துக்கும் கிடைக்கப்பெற்றுள்ள மேன்முறையீடுகள் மேற்படி 02 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேலதிகச் செயலாளர் (அரசாங்க நிர்வாகம்) அவர்களுக்கு அனுப்பப்படல் வேண்டும்.

04. அவ்வாறு கிடைக்கப்பெறுகின்ற மேன்முறையீடுகள் என்னால் நியமிக்கப்படும் குழுவிற்கு முன்னளிக்கப்படும். குழுவினால் அம் முறைப்பாடுகள் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்படும் நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றங்கள் மற்றும் ஒழுக்காற்று குற்றச்சாட்டுக்கள் ஆகியனவற்றிலிருந்து விடுவிப்பதற்கான பரிந்துரைகளை, தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு நிர்வாக அதிகாரிகள், மற்றும் நியமன அதிகாரிகளுக்கு என்னால் முன்னளிக்கப்படும்.

05. குழுவினால் நிதிசார் நிவாரணங்களை வழங்குவதற்கான சிபார்சு முன்னளிக்கப்படும் பட்சத்தில், அவ்வாரான சிபார்சு குறித்து தேவையான ஒதுக்கீடுகளை பொதுத் திறைசேரியிடமிருந்து பெற்றக்கொண்டு அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி என்னால் குறித்த அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒப்பம்/. ஜே. தடல்லகே
செயலாளர்
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக
ஆட்சி அமைச்சு